விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 21 புதன்கிழமை (07.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323




# வரவு-செலவுத்திட்ட உரையை புறக்கணிக்க கூட்டமைப்பு முடிவு

## யுத்தச்செலவு அதிகம் எனவும் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் யுத்த செலவீனத்தை அதிகமாகக் கொண்டதாகக் கூறப்படும் வரவு-செலவுத்திட்டம் இன்று காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முக்கிய உரையாற்றவுள்ளார். இந்த உரை தொடர்பான நிகழ்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கப் போவதாக அதன் நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸமஹாராம காட்டுப்பகுதியில் இருந்து மூன்று சடலங்கள் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம தம்பரவெவ' பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து நேற்று அதிகாலை மூன்று பெரும்பான்மை இனத்தவர்களின் சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தம்பரவெள கிராமத்திலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவிலுள்ள காட்டுப்பகுதியில் வெவ்வேறு இடங்களிலிருந்து மீட்கப்பட்ட இச்சடலங்கள் மூன்றிலும் சரமாரியான வெட்டுக்காயங்கள் இருப்பதாக திஸ்ஸமஹாராம வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை தம்பரவெள காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு அமுக்க வெடியில் சிக்கி காயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ள மூவரின் சடலங்களை நேற்றுக்காலை மீட்டதாகவும் நேற்று முன்தினம் இரவே இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்மொழியில் பேசும் சிலர் காட்டுப்பகுதியில் நடமாடித்திரிவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். தொழில் நிமித்தம் காட்டுப்பகுதிக்குச் சென்றவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## வரவு-செலவுத்திட்டம் இன்று காலை சமர்ப்பிப்பு

மகிந்த சிந்தனையின் கீழ் தயாரிக்கப்பட்ட மூன்றாவதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 2008 ஆம் ஆண்டிற்கானதுமான வரவு செலவு திட்டம் நிதியமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வரவு செலவு திட்டம் காலை 9.45 மணியளவில் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவினால் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படுவதை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு வழமையை விடவும் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் மன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் பொலிஸ் மோப்ப நாய்கள் கொண்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் கடற்படையினர் போராப் படகுகளில் நாடாளுமன்றத்தை சுற்றியுள்ள தியவன்னா ஓயாவில் நேற்றுக் காலை முதல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். (ச)

## 120 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் 120 மேலதிக வாக்குகளினால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறை

## வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கும்போது புலிகளின் விமானம் நாடாளுமன்றை தாக்கலாம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் 120 மேலதிக வாக்குகளினால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதற்கான பிரேரணையை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்வைத்திருந்தார்.

இப்பிரேரணைக்கான விவாத முடிவில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது இதற்கு ஆதரவாக 124 வாக்குகளும் எதிராக 04 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கு ஆதரவாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழு, முஸ் லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய அரசாங்கம் சார்பு கட்சிகள் அனைத்தும் (08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் விமானம் நாடாளுமன்றை தாக்கலாம்

## அரசாங்கம் அச்சம்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் வேளையில் நாடாளுமன்றத்தின் மீது புலிகள் தம்வசமுள்ள விமானங்கள் மூலமாக தற்கொலைத்தாக்குதலை நடத்தக்கூடும் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. இதனை விட முக்கிய இடங்கள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

தமிழ் மக்களுடன் எமக்கு எத்தகைய விரோதமும் இல்லை எனினும் புலிப் பயங்கரவாதிகள் அழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது;

அன்று காலி துறைமுகத்திற்கு மீனவர் படகுகளில் ஊடுருவியே தாக்குதல் நடத்தினர் அதேபோல் அநுராதபுர விமானப் படைத்தளம் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். நாங்கள் அவ்வழியாக சென்று திரும்புகின்றபோது கூட எமக்கு சந்தேகம் ஏற்பட்டது. என்றோ ஒருநாள் புலிகள் இந்த வேலிக்குள் நுழையக் கூடும் என்று நாம் சந்தேகப்பட்டோம். அதேபோல் பல்வேறு இடங்கள் தொடர்பிலும் சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது.

எமக்கு தமிழ் மக்களுடன் எவ்விதமான விரோதமும் இல்லை. எனினும் புலிகள் ஒழிக்கப்படவேண்டும். காலை வேளைகளில் தான் புலிகள் தாக்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வன் மறைவுக்கு யாழ்ப்பாண ஆயர் அனுதாபம்

## தலைவர் பிரபாவுக்கு கடிதம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு யாழ். ஆயர் அனுதாபம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவினால் அதிர்ச்சியும் கவலையும் அடைந்த நிலையில் இந்த அனுதாபச் செய்தியை தங்களுக்கு அனுப்புகின்றோம். தமிழ் மக்களுடைய நீண்டகால போராட்டத்தில் தம்மை முழுமையாய் அர்ப்பணித்துள்ளோர் வரிசையில் இவரும் சேர்ந்துள்ளார்.

காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் போராட்டம் இது போன்ற இழப்புக்களையும் திடீர் அதிர்ச்சி (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனின் கொலையை கண்டித்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலையைக் கண்டித்து தமிழ்நாட்டின் சென்னையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சென்னை விக்ரோறியா அரங்கம் முன்பாக சென்னை மாவட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் தலைமை வகித்தார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு மறுமலர்ச்சி தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வை.கோ தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்தில் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் பெரிய திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. நிகழ்வின் தொடக்கத்தில் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு 2 நிமிட நேரம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வழங்கற் கட்டளைகளை பெற அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 24 பல நோ.கூ. சங்கங்கள் ஊடாக செப்ரெம்பர் மாதத்திற்கான சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விநியோகங்களுக்குரிய வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று காலை 9.00 மணிமுதல் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று உடனடியாக களஞ்சியத்தில் பொருட்களை பெற்று விநியோகத்தை ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியத்தந்துள்ளார். (ச)

## பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று பிற்பகல் ஒருமணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

16 வயதுக்குட்பட்ட பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து அருணோதயக் கல்லூரியும், 18 வயதுக்குட்பட்ட பிரிவில் அருணோதயக் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும் மோதவுள்ளன. (ச)

## கந்தசஷ்டி

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் தினமும் 8.30 மணிக்கு முருகப் பெருமானுக்கு சண்முகா அர்ச்சனையும் மாலை 4.00 மணிமுதல் கந்தசஷ்டி உற்சவமும் நடைபெறும். வியாழக்கிழமை மாலை சூரசங்கார உற்சவமும், வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (ச)

## லண்டனில் நடந்த அஞ்சலி நிகழ்வில் 10 ஆயிரம் மக்கள் பங்கேற்பு

(லண்டன்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட 6 பேருக்கும் லண்டனின் வடமேற்கேயுள்ள ஹரோ லெசர் சென்ரர் மண்டபத்தில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் 10 ஆயிரம் வரையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 6.15 மணிக்கு தொடங்கியது. ஈகச்சுடரினை மாவீரர் லெப்.கேணல் புலேந்திரனின் துணைவியார் சுபா ஏற்றிவைக்க அகவணக்கம் நடைபெற்றது. பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் திருவுருவப்படத்திற்கு வெண்புறா நிறுவனத்தின் ஐரோப்பிய பொறுப்பாளர் மருத்துவர் என்.எஸ். மூர்த்தி மலர்மாலை அணிவித்தார். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட 6 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் மற்றும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். தேசத் தின்குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் பாலசிங்கம் இந்த வீரவணக்க நிகழ்வில் கலந்து கொண்டு கடந்த இரண்டரை தசாப்தங்களாக விடுதலைப் பயணத்தில் ஒன்றாகப் பயணித்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன், லெப்.கேணல் அன்புமணி உள்ளிட்ட ஏனைய மாவீரர்களுக்கும் இறுதி மரியாதை செலுத்தினர். (சு-5)

## ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளர் எஸ்.பியினை அரசுடன் இணைக்க பேச்சு

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான எஸ்.பி.திஸாநாயக்க விரைவில் ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணையவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட மன்னிப்பின் மூலம் திஸாநாயக்க சிவில், அரசியல் உரிமைகளை திரும்ப அளிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாக தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் வலது கரமாக செயற்பட்ட இவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பின் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் உயர் பதவியை வகித்து வந்தார்.

நீதித்துறையை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் இவர் உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி தமது பதவியை இழந்தார். திஸாநாயக்கவின் நெருங்கிய நண்பரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவரது இரண்டு வருட சிறைத்தண்டனையை 41நாட்களாகக் குறைத்து அவரை விடுதலை செய்தமை குறிப்பிடத்தக்கது. (சு,து)

## கெயிற்றியிலிருந்து நாடு கடத்தப்பட்ட இராணுவத்தினர் 110 பேரும் கைது

கெயிற்றியிலிருநது நாடு கடத்தப்பட்டு இலங்கை வந்தடைந்த ஐ.நா.அமைதிப் படையில் பணியாற்றிய 110 இலங்கை இராணுவ வீரர்களும் இலங்கை இராணுவப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் குற்றவாளிகளாகக் காணப் படுபவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

ஒரு பெண் உட்பட இரண்டு பிரிகேடியர்கள், இரண்டு கேணல்கள், ஒரு டாக்டர், ஒரு வழக்கறிஞர் ஆகியோரைக் கொண்ட குழு வொன்று கெயிற்றியிலுள்ள போட்-ஓ-பிரின்ஸ்க்கு விசாரணைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டிருந்த நிலையில் வயது குறைந்தவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகத்தை மேற்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் இந்த 110 இராணுவ வீரர்களும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கெயிற்றியில் அமைதியை நிலைநாட்டவென அனுப்பப்பட்டிருந்த 950 வீரர்களில் 110பேர் ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். (சு,து)

## மக்கள் வங்கிக் கிளைகள் நாளை திறந்திருக்கும்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நாளை அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் திறந்திருக்குமென வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.ஆனந்தராஜா அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் மக்கள் வங்கியில் சேமிப்புக்கணக்காயின் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேலும், நிலையாவைப்பாயின் 5 இலட்சம் ரூபாய்க்கு மேலாயினும் வைப்பிலிட்டால் அல்லது மேற்படி தொகையில் கணக்குகளை ஆரம்பித்தால் வங்கி முகாமையாளர்களால் விசேட பரிசுப் பொருட்கள் வழங்கப்படுமெனவும் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (சு-5)

## புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 30 சிறுவர்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 30 சிறுவர்களுக்கு தீபாவளி தினத்துக்கான ஆடை கொள்வனவுக்கென சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினால் தலா 2 ஆயிரம் ரூபாவீதம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய்ப் பிரிவில் நடைபெறவுள்ளது. இதேவேளை சமீபத்தில் நடைபெற்ற சிறுவர் தினத்திலும் சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினால் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிவபூமி முதியோர் இல்லத்தில் தீபாவளி கலை நிகழ்ச்சி

சுழிபுரம் வழங்கம்பராய் சிவபூமி முதியோர் இல்லத்தில் தீபாவளி தினமான நாளை விசேட பிரார்த்தனையும் மூத்தோரை மகிழ்விக்கும் கலை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலாசநாதனின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சியும் பிற்பகல் ஒரு மணி முதல் முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (ச)


பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ.

தலைமை நிலையம்: 13,14 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

கிளை: 47,பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஆடை வகைகளுட்குள் ஆடவர்களுக்கான

புதிய சேட் ரகங்களை அறிமுகப்படுத்துகின்றோம்

| சேட் பெயர் விபரம் | வகைகள் L.S. | S.S. | விலை |
|---|---|---|---|
| பாக் அவனியு | // | | 500/= |
| G.Q. இன்ட னேசனல் | // | | 600/= |
| பொரன்ஜி வோடர் | // | | 600/= |
| INZIO கொலர் வோடர் | // | | 1350/= |
| GARVEN பரிஸ் | // | | 1375/= |
| GARVEN செல் ரெக் | // | | 1200/= |
| GO மென் பெயாக் | | // | 1200/= |
| GY ஜென்னி (புரன் செல்வ்.எம்ரேடர் வேகி) | | // | 1250/= |
| PIERRI CARLO பிலேன் கிறீம் | // | | 1250/= |
| ALAIN THIHIPPE வைட் | // | | 1150/= |
| DAISHA செல் வேக் | // | | 1225/= |
| GARVAN பரீஸ் பிளேன் கலர் | // | | 1225/= |
| ELUNO இன்டனஸ்னல் மல்டிகலர் | // | | 1160/= |
| ELUNO இன்டனஸ்னல் கொலப் டிபன்கலர் | // | | 1225/= |
| TRUEKNIGHT கொலர்கப்.எம்ரேடர்வேக் | // | | 1375/= |
| HAZARD சிமோல் செக் | // | | 1160/= |
| GARVEN கொட்டன் பிரின் டிபரன்கலர் | // | | 1750/= |
| HAZARD செல்வ் டினைசன் | // | | 1475/= |
| JOHNAOBIE செக் | // | | |
| ROTHMANS பிரன் எம் ரேடர் | // | | 1280/= |
| HARVEN செல்டிசைன் ஜகாட்வேக் | | // | 1325/= |
| HARVEN மல்டிஸ்ரைப் | | // | 1325/= |
| HAZARD பிலேன் மல்டி | | // | 1450/= |
| CIUBCNE பிலேன் செக் | | // | 1200/= |
| HAZARD வைட் செல் வேக் | | // | 1450/= |
| ES சைநீஸ் டிசைன்ஸ் | | // | 985/= |
| CARVEN மல்டி ரெக்கொலர் புரன்ஸ் ரேப் கலர் | | // | 1325/= |
| VITUDA ஜகாட் திரட்வேக் | | // | 1250/= |
| LAROSE கப்ஸ்சட் ஜகாட் வேக் | | // | 1300/= |
| PIRRI கொட்டன் லைட் சேட் மிநப்பு டிசைன் | | // | 1150/= |
| INZIO ஸ்ரைப் | // | | 1200/= |
| DAISHE செல் ஜகாட் வேக் | | // | 1150/= |
| VITUDA ஜகாட் வேக் | | // | 1150/= |
| FIRAMO செல் செக்ஸ் | | // | 1225/= |

வாருங்கள் வந்து பாருங்கள் வாங்கி மகிழுங்கள் தரமான அழகான ஆடைவகைகளுக்கு நாடுங்கள் ஜி.எஸ்.லிங்கநாதன் அன்.கோ. தனிப்பெரும் புடைவை சாம்ராச்சியம். திருமணப்பட்டுப் புடைவைகள், விழாக்காலத் தேவைக்கு ஏற்ற நவீனரக சேலைகள் வண்ணமிகு வகைகளில், சல்வார்,சோழிகிற்,பிளவுஸ்பீஸ்,ஸ்கேட், பிளவுஸ், வேட்டி சால்வை பல ரகங்களில் ஆடவருக்கான ரெடிமேட் சோக்கோ ஜீன்ஸ்,கொட்டின் ரவுஸர் (ஜீன்ஸ்),சேட்,ரவுஸ்சர்,டெனிம் வகைகளும் சூட்டிங்,சேட்டிங்,சேட் மற்றும் புதிய ரக துணிவகைகள் சிறுவருக்கான ரெடிமேற் ஆடைவகைகள் பலரகமான பென்ஸி வகைகள் பேபி நீட்ஸ்,வெடிங் கிவ்ற், திருமண அழைப்பிதழ், சூட்கேஸ் அனைத்தும் 15 வீத விலைக்கழிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது என்பதை வாடிக்கையாளர்,அன்பர்கள்,நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

அனைத்து புதிய ரக சாறி வகைகளும் தெரிவு செய்து கொள்ளலாம்

வாருங்கள்! வந்து பாருங்கள்! மகிழுங்கள்!!!

| சேட் பெயர் விபரம் | வகைகள் L.S. | S.S. | விலை |
|---|---|---|---|
| FABLINT பிளேன் கலர் | | // | 1100/= |
| CIBENE டாக் கலர் | | // | 1200/= |
| HAZARD DC ஸ்கலர் செல்ங்ஸ் | | // | 1450/= |
| SCORPION எம்ரேடர் வேக் DC,LS | | // | 900/= |
| GRAFF ஒறிஜினல் மல்டிட் கலர் | // | | 890/= |
| LAROSE கொலர் பிறன்ட் சிலிப் | // | | 1525/= |
| CONSTANT திரட் எம்ரேடர் DC | | // | 750/= |
| HAZARD செல்புசஸர் டிசைன்ஸ் | // | | 1475/= |
| TRUE KNIGHT கிரின் கலர் | // | | 1250/= |
| UNION PINER வைட் and வைட் | | // | 690/= |
| CARVEN பிலேன் சைண்ட் LC | // | | 1225/= |
| HIGHLIGHT சொட் கலர் | | // | 575/= |
| I.C.L.E வைட் கலர் மிதப்பு செக் வைட் | | // | 800/= |
| VIVIAN SPADES மல்டி பிரின்ட் | | // | 950/= |
| HAZARD மல்டி ஸ்ரைப் DC கலர் | | // | 1690/= |
| VTTUDA மல்டி புட்டா ஸ்ரைல் LC கலர் | // | | 1200/= |
| CLIENTAGE மல்டி கலர் DC டாக் | // | | 1060/= |
| ZUNWANGCHE சைட் வேடர் வெல்வெட் | // | | 1375/= |
| WOOCLS VALLY பிலேன் L.C | // | | 1150/= |
| GALEF பிரன்ட் எம்ரோ L.C | // | | 1300/= |

ஜீன்ஸ் துணி ரகங்கள்

01) HUNGAMA SUGAM FAB
02) MERINO EXTRA FINE WOOL
03) SUPER FEEL ENGLAND
04) TYOTI SUITING GWALIOR
05) SUNPLAZA GWALIOR
06) TORAY JAPAN
07) JAPAN LEGEND
08) CLUB CLASS
09) COTTON TAZOOR

எமது இதயம் கனிந்த தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

(சி-515)

# இன்று ஒரு தகவல்

## பாதுகை

புராண விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிற பொழுது விஞ்ஞானக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு அதைப் பற்றிக் கேள்விகள் கேட்க முயற்சிப்பது தப்பு. அதனாலே, அப்படி யாராவது போட்டுக் கொண்டிருந்தால் அதைக் கழற்றி வைத்துவிட்டு ஆன்மீகக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு இதைக் கேளுங்கள். அப்பொழுதுதான் குறுக் குக் கேள்விகள் கேட்காமல் நீங்கள் இதைக் கேட்க முடியும். நானும் கொஞ்சம் துணிச்சலாக உங்களிடம் பேச முடியும்.

வைகுண்டத்திலே ஒருநாள் திருமால் வழக்கத்துக்கு மாறாக ஒரு காரியம் செய்தார். தன்னுடைய பாதுகையை பள்ளியறைக்குள்ளே விட்டு விட்டுப் பாம்பனையிலே படுத்துவிட்டார். உடனே அவருடைய திருமுடிக்கு கோபம் வந்துவிட்டது. முடி, பாதுகை இரண்டும் தவம் செய்து அந்தப் பதவியை அடைந்தனவாம்!

திருமுடி பாதுகையைப் பார்த்து சப்தம் போட ஆரம்பித் தது. "ஏ பாதுகையே! உனக்கு அறிவு இருக்கிறதா? கண்ட கண்ட இடத்தையெல்லாம் மிதிக்கிற நீ இப்படி படுக்கை அறைக்குள்ளே வரலாமா? போ! வெளியே! என்று கத்தியது. பாதுகை, இதற்கு பணிவாகப் பதில் சொல்லியது. "திருமுடியே! நீ சொல்வது சரிதான்! இருந் தாலும் நானாக இந்த இடத்துக்கு வரவில்லை. பகவானுடைய திருவடிதான் என்னை இங்கே கொண்டு வந்தது. அப்படி இருக்கும்போது வீணாக என்மீது நீ ஏன் கோபப்படுகிறாய்? எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? இது சரியா? என்று கேட்டது.

இதைக் கேட்டதும் திருமுடிக்கு மேலும் கோபம் வந்துவிட்டது. "பாதுகையே! நீ ரொம்ப அதிகமாகப் பேசுகிறாய்! நீ மிகவும் இழிவான ஒரு பொருள். நீ இவ்வளவு தூரம் பேசக் கூடாது. இங்கே வருவதற்கு உனக்குத் தகுதியே கிடையாது... நான் எம்பெருமானது தலைக்கு மேலே இருக்கக்கூடிய தகுதியுடையவன். என்னுடன் சரிக்குச்சரி பேச உனக்குத் தகுதி கிடையாது. அதனாலே இங்கே இருக்காதே! சீக்கிரம் போய்த் தொலை" என்றது.

"திருமுடியே! எதற்காக இப்படிப் பெருமை பேசிக் கொள்கிறாய்? எனக்கென்று தனியாக ஒரு செயலும் கிடையாது. நான் எப்பொழுதும் ஐயன் திருவடியை ஒட்டியிருக்கிறவன்... அந்தப் பாதத்தை நம்பியவர்களுக்கு நல்லது நடக்கிறது. அடியவர்கள் எல்லோரும் பகவானது அடியைத்தான் விரும்புகிறார்கள்." அடி சேராய்.. என்று பாடுகிறார்கள்.. அதனாலே என்னைப் பழித்துப் பேசாதே என்றது பாதுகை.

இவ்வளவு நேரமும் இந்த விவகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கும் சக்கரமும் திருமுடியுடன் சேர்ந்து பாதுகையை விரட்ட ஆரம்பித்தன. எப்பொழுதும் உயரத்தில் இருப்பவர்களுக்குத்தான் மதிப்பு அதிகம். திமிராகப் பேசாதே... பேசாமல் வாயை மூடிக் கொண்டு போகிறாயா? இல்லையா? என்று அவை இரண்டும் கத்த ஆரத்பித்தன.

பாதுகையின் நிலைமை பரிதாபமாக இருந்தது... உடனே நாராயணனைப் பார்த்து "கருணைக்கடலே! நீங்களே என்னை உள்ளேகொண்டு வந்து விட்டுவிட்டு இவர்களை இப்படி பேச விடுவது சரியா" என முறையிட்டது.

திருமால் உடனே பாதுகையைப் பார்த்து "பாதுகையே கவலைப்படாதே" என்று கூறிவிட்டு திருமுடியைப் பார்த்தார். முடியே.. நீ தற்பெருமையாகப் பேசிப் பாதுகையை அவமானப்படுத்தி விட்டாய்... அதனால் அடுத்துவரும் இராமாவதாரத்தில் 14 வருடம் இந்தப் பாதுகையை பூசித்துக் கொண்டு இருக்கக்கடவது.

அங்கே சக்கரமே... நீங்கள் இரண்டு பேரும் என் கண் முன்னாலேயே பாதுகையைப் பழித்துப் பேசிவிட்டீர்கள். அதனாலே அந்த இராமாவாரத்திலே நீங்கள் இரண்டு பேரும் பரதனாகவும் சத்துருக்கனாகவும் பிறந்து இந்தப் பாதுகையை 14 வருட காலம் வழிபடக்கடவது" எனச்சாபமிட்டார்.

அதனாலேதான் பதினாலு வருஷம் பாதுகைக்கு முடி சூட்டி பரதனும் சத்துருக்கனும் பாதுகையை பூஜித்தார்கள். "கீழேஜூ ராயினும் தாழவுரை" என்பதற்கு இது விளக்கம். சிறியவர்கள் என நினைத்து யாரையும் இகழக்கூடாது என்பதுதான் இதிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடிய படிப்பினை "மடல் பெரிது தாழை, மகிழினிது கந்தம் அமல் பெரிது என்றிருக்க வேண்டாம்" என்பது அறிவுரை.

பாதுகை பற்றி நான் இவ்விதம் சொல்லிக்கொண்டிருந்த போது என் எதிரிலே ஒருவர் வந்து உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். நல்ல விஷயங்களைக் கேட்பதற்கு நல்லவர்கள் எப்பொழுதும் தயாராகவே இருப்பார்கள் என நான் நினைப்பதற்குள்ளே அவர் என்னைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார். "நீங்கள் சொல்வது சரிதான்... நான் இப்பொழுது உங்களைத் தேடி வந்ததே பாதுகை சம்பந்தப்பட்ட விஷயமாகத்தான் என்றார். நேற்று நீங்கள் என் வீட்டுக்கு வந்துவிட்டுத் திரும்புகிறபோது உங்களுடைய பழைய செருப்பை விட்டு விட்டு என்னுடைய புதிய செருப்பை போட்டுக்கொண்டு வந்து விட்டீர்கள். உங்களுடைய பாதுகையை பக்தி சிரத்தையுடன் கொண்டு வந்திருக்கிறேன். ஏனென்றால் அதைக் காலிலே போட முடியவில்லை. காது அறுந்து கிடக்கிறது. நான் பரதன் இல்லை. பாமரன். தயவு செய்து எனது செப்புகளை கொடுத்து விடுங்கள்" என்றார்.

நீங்கள் என்ன சொல்கிறீர்? கொடுத்துவிடலாமா? இவ்வளவு தூரம் தெரிந்தபின் அதைக் கொடுக்காமல் விடலாமா?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பட்டப்படிப்பு மட்டத்துக்கு தாதியர்களின் கல்வி தீர்மானத்தை அமுல் படுத்த ஜனாதிபதி உத்தரவு

பல்கலைக்கழக பட்டப்படிப்பு மட்டத்துக்கு தாதியர்களின் கல்வியினை தரம்



உயர்த்தும் சுகாதார அமைச்சின் தீர்மானங்களை அமுல்ப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரச சேவை ஐக்கிய தாதிமார் சங்க பிரதிநிதிகள் ஆகியோர்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன் போது அவர்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்ட ஜனாதிபதி உரிய தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவும் உறுதி வழங்கினார்.

அமெரிக்காவில் 500 தாதிமாருக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் விடயம் தொடர்பில் சந்திப்பின் போது பேசப்பட்டது. தாதிமாரின் சீருடை மற்றும் வேலை நேரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இட மாற்றம் தொடர்பில் கைக் கொள்ளப்பட்டு வரும் மூன்று வருட கால கட்டுப்பாடு தொடர்பில் பிரதிநிதி கள் சுட்டிக்காட்டிய போது அக் கட்டுப்பாட்டினை தளர்த்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். தாதிமார்களுக்கான ஆங்கில மொழியறிவினை விருத்தி செய்யும் நடவடிக்கைகள் பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்ட தோடு சிறப்பாக பணியாற்றிய தாதிமார்களை கௌரவிப்பது தொடர்பான சுகாதார அமைச்சின் திட்டம் குறித்தும் இச்சந்திப்பின் போது பேசப்பட்டது. (அ-5)

# தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம்

(கொழும்பு)

2008ஆம் ஆண்டில் தேசிய பாடசாலைகளுக்கிடையில் இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது. இது தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பபட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்டாய சேவைக்காலத்தை பூரணப்படுத்த வேண்டியுள்ள ஆசிரியர்கள் தமது நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு தேவைப்படும் சேவைக் காலத்தை பூர்த்தி செய்ய வேண் டியிருப்பது அத்தியாவசியமாகும். தகுதிகாண் காலத்தைப் பூரணப் படுத்தாத விண்ணப்பதாரர்களின் இடமாற்ற விண்ணப்பப்படிவம் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

உரிய மாதிரிப்படிவத்தின் பிரதி 2006ஆம் ஆண்டில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அம்மாதிரிப் படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்டு அதிபரின் பரிந்துரையுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய இட மாற்றப் பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தர முல்லை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, அவ் விண்ணப்பப்படிவத்துடன் முதல் நியமனக் கடிதத்தின் உறுதி செய்யப்பட்ட நிழற்பிரதி மற்றும் அதிபரினால் உறுதி செய்யப்பட்ட சொந்த நேர அட்டவணையையும் இணைத்து அனுப்புதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

### சேமலாப நிதிய இலக்கத்துக்கு பதிலாக தே.அ.அட்டை இலக்கம் வழங்க நடவடிக்கை

நாட்டிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் என்பவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்டு வந்த ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவ இலக்கத்திற்குப் பதிலாக குறித்த ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை அங்கத்துவ இலக்கமாக வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொழிற் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-5)

## இராசிபலன்

07.11.2007
(ஐப்பசி 21, புதன்கிழமை)
திரயோதசி பின்னிரவு 12.36 மணிவரை
அத்தம் பிற்பகல் 05.50 மணிவரை
இராகுகாலம் 12.05-01.35 மணிவரை
சுபநேரம் 04.35-06.05 மணிவரை
பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | பணவருவாய், காரிய அனுகூலம், சுவாரஸ்யம், ஆரோக்கியம். |
| இடபம் | மனஸ்தாபம், பெரியோர் ஆசி, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், |
| மிதுனம் | அற்பர் உறவு, பயந்த சுபாவம், சுப நிகழ்வு, காரியதாமதம். |
| கடகம் | கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, உடல் நலம். |
| சிங்கம் | பொருள் விரயம், விவாதம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், சகோதரர் உதவி. |
| கன்னி | புதிய பொருள் சோக்கை, ஜனவசியம், ஆழ்ந்த சிந்தை, முயற்சி பலிதம். |
| துலாம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுதல், இடமாற்றம், சுபசெலவு. |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, பெருமையடைதல், தெய்வசிந்தை. |
| தனுசு | நல்ல செய்தி, நண்பர்கள் உதவி, சுபநிகழ்வு, உற்சாகம். |
| மகரம் | புதிய திட்டமிடல், உடல் உழைப்பு, பிரயாணம், தந்தைவழி உறவு. |
| கும்பம் | பெரியோர் வெறுப்பு, ஆரோக்கியக்குறை, பணக்குறைவு, பிறருக்கு உதவுதல். |
| மீனம் | குடும்ப மகிழ்ச்சி, திடீர் பயணம், பொருள் சேர்க்கை, காரிய நன்மை. |

வ ள வ ன்

# டிசம்பர் 10 இல் ஆரம்பமாகும் சாதாரண தர பரீட்சையை இந்தியாவிலும் நடத்த நடவடிக்கை

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

பரீட்சைக்கான திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவிப்பு. இவ்வருடத்திற்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை அடுத்த மாதம் 10ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. நாடு பூராகவுமிருந்து 5 இலட்சத்து 29 ஆயிரத்து 720 மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களில் 3 இலட்சத்து 99 ஆயிரத்து 163 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகளுக்காக நாடு முழுவதும் 3 ஆயிரத்து 987 பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களை விட இம்முறை அதிகளவிலான பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது இந்தியாவிலுள்ள இலங்கை மாணவர்களின் நலன் கருதி இந்தியாவிலும் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைஅதிபரூடாகத்தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதே வேளை தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையுடன் வந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். இம்முறை மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு பரீட்சைகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)



வடமராட்சி கல்வி வலயத்தில் பருத்தித்துறைக் கல்விக் கோட்ட (60) அறுபது ஆசிரியர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் பங்குபற்றிய ஆசிரியர்களின் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

# தரை, கடல், வான் வழி படை நடவடிக்கைகளால் வடபகுதி கண்காணிப்பு பணிகளில் பாரியசிக்கல்

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பும் வட பகுதியில் தரை, கடல், வான் வழியில் மேற்கொண்டுவரும் படை நடவடிக்கைகளால் அளவு கடந்த சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலைமையினால் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்கள் ஏற்பட்டுள்ளதோடு வாராந்த கண்காணிப்பு அறிக்கையை துல்லியமாக தயாரிக்க முடியாமல் போயுள்ளது என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்பு குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடபகுதியில் தரை, கடல், வான் வழியில் இராணுவமும் விடுதலைப்புலிகளும் படை நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளனர். இதனையடுத்து அங்கு மக்களின் பாதுகாப்பு நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. இந் நிலைமையினால் வடபகுதியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளது.

வாராந்த கண்காணிப்பு அறிக்கையில் துல்லியமாக தயாரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து வடபகுதியில் இராணுவம் சோதனைச்சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதோடு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

அதேவேளை வவுனியா மேற்கு வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி, வடக்குப்பூநகரி, முகமாலை, உயிலங்குளம் வடக்கு, பெரிய மடு பகுதிகளை நோக்கி இராணுவம் கடும் செல்தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றது.

வடபகுதியில் முன்னரங்க நிலைகளில் இரு தரப்புக்குமிடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்த்தரப்பின் முன்னேற்ற முயற்சியை முறியடித்துள்ளதாக இரு தரப்பும் பரஸ்பரம் தெரிவித்து வருகின்றன. (அ-5)

## பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சுக்களின் செயலாளர்களுடன் பொக்ஸ் விரிவான பேச்சு

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்த பிரித்தானிய கன்சவேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லியம் பொக்ஸ் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்த லியம் பொக்ஸ் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

தனது விஜயத்தின் ஓர் பகுதியாக வாகரை மற்றும் திருகோணமலைக்கு விஜயம் செய்யும் பொக்ஸ் அங்கு மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களை சந்திக்கும் அதேவேளை அப் பகுதியில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் புனரமைப்பு வேலைத் திட்டங்களையும் பார்வையிடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-5)

## திருச்சி வாழவந்தான் கோட்டையில் இலங்கை அகதி வெட்டிக் கொலை



தமிழகத்தின் திருச்சி - வாழவந்தான் கோட்டையில் அமைந்துள்ள அகதி முகாமில் இலங்கை தமிழ் அகதி ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். குமாரசிங்கம் தவக்குமார் (வயது 26) என்ற இளைஞரே இவ்வாறு வெட்டிக் கொலைசெய்யப்பட்டவராவார். மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ள இவரது சடலம், அகதி முகாமின் அருகிலுள்ள குளக் கரையில் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் பல்வேறு இடங்களில் வெட்டுக்காயங்கள் உள்ள அதேவேளை, தலை பாராங்கல்லால் எறியப்பட்டு நசிந்த நிலையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கொலைக்கு தனிப்பட்ட குரோதம் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து தமிழகத்திற்கு அகதியாக சென்ற இவர், அண்மையிலேயே திருமணம் முடித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 50 வருட கால இன ஒற்றுமையை அரசாங்கம் வீணடித்துவிட்டது

## கிரியெல்ல எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று மாதத்திற்குள் கௌரவமான சமாதானம் ஏற்படுத்தப்படும் என்று மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் நாட்டில் படுகொலைகள் நாளுக்கு நாள் அதி கரித்துள்ளன.

தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே கடந்த 50 வருட காலமாக இருந்த இன ஒற்றுமையை இந்த அரசாங்கமே வீணடித்துவிட்டது என்று ஐ.தே.க.வின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சுங்கக் கட்டளைச்சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில் மேலும் கூறியதாவது,

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை தனி நபருக்கோ நிறுவனத்திற்கோ விட்டுக் கொடுக்க முடியாது எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினால் பாராளுமன்றத்தின் அதிகாரம் குறைத்து வருகின்றது.

இருக்கின்ற அதிகாரத்தை பாதுகாப்பதற்கு சகலரும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண் டும் "கோப்" நிறுவன அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது விடின் பாராளுமன்றத்தின் மூலம் எதிர்காலத்தில் பயன் இருக்குமா? என்று மக்கள் கேள்வி எழுப்புவார்கள்.

"கோப்" அறிக்கை இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் விசாரணை தாமதப்படுத்தப்படுகின்றது. விசாரணைகளை துரிதப்படுத்தி குற்றவாளிகள் மீது நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கை விடுகின்ற போதும் நாட்டில் அபிவிருத்தி வேலைகள் எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை.

மஹிந்த சிந்தனையின் மூலமாக முன் வைக்கப்பட்ட 164 யோசனைகளில் கடந்த இரண்டரை வருடங்களில் எத்தனை யோசனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாங்கள் பிச்சை கேட்காமலே 4 ஆயிரத்து 500 கோடி ரூபா கடனாக கிடைக்கவிருந்தது. எனினும் இந்த அரசாங்கம் பெறும் கடன் தங்க எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டும் என்று கூறுவது வெட்கக்கேடானது.

யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து படுகொலைகள் இன்றி நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்சென்றோம் எனினும் இன்று சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்டுள்ளது.

தெற்கு, கிழக்கு மலைபகத்தில் உள்ள சுற்றுலாத்துறை ஹோட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கானோர் வேலையின்றி இருக்கின்றனர். சகோதர நிறுவனத்தின் மீது வெறுப்புக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த பலர் எம்முடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கின்றனர். வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது சிலர் எம்முடன் இணைவார்கள்.

மஹிந்த சிந்தனையில் யுத்தம் தொடர்பாக ஒரு வசனம் கூட குறிப்பிடப்படவில்லை. யுத்ததிற்கு மக்கள் ஆணை கிடைக்கவில்லை. 3மாதத்திற்குள் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துவதாக மஹிந்த சிந்தனையில் கூறப்பட்ட போதும் நாட்டில் படுகொலைகள் அதிகரித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி ஆலோசனைக்குழுவின் மூலமாக முன்வைக்கப்படுகின்ற தீர்வுக்கு தமிழ் மக்களிடமிருந்து ஆதரவு கிடைத்தால் அதற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம். யுத்தத்தின் மூலமாக தீர்வு காண்பதற்கு முயற்சித்தால் நாட்டில் பிரச்சினைகள் அதிகரிக்கும். அநுராதபுர விமானப்படைத்தளத்தின் மீதான தாக்குதல் மூலமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களை தெரிந்துகொண்டோம்.

யுத்தம் எனும் போர்வையில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் 50 வருடங்களாக இருந்த இன ஒருமைப்பாட்டை இந்த அரசாங்கம் வீணடித்து விட்டது.

அந்த இன ஒற்றுமையை ஏற்படுத்தாவிடின் நாட்டை கட்டியெழுப்பமுடியாது. அவ்வாறான நிலைப்பாட்டை ஏற்படுத்தாது அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கினால் மக்கள் தகுந்த பாடத்தை புகட்டுவார்கள். (அ-5)

## பரப்புரைக் கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளையின் செஞ்சிலுவைச் சங்க செயற்திட்டங்கள் தொடர்பான பரப்புரைக் கூட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ஏழாலை மகாவித்தியாலயத்திலும் பிற்பகல் 1.45 மணிக்கு ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

இப்பரப்புரைக்கூட்டத்தில் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் கிளையின் பரப்புரை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு பரப்புரை நிகழ்த்துவார்கள். (அ)

# கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சபைக்குக் சமுகமளிக்கவில்லை

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் திங்கட் கிழமை பாராளுமன்றத்திற்கு சமூகமளித்திருக்கவில்லை. பாராளுமன்றம் திங்கள் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குப் பண்டார தலைமையில் கூடிய போது தினப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் சுங்க கட்டளைச்சட்டம் மீதான விவாதம் நடைபெற்றது. பிரதிநிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப் பிட்டிய காலை 9.45 மணியளவில் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதன் பின்னர் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டனர். சபை அமர்வுகள் பகல் உணவு இடைவேளைக்காக நண்பல் 12.30மணிக்கு இடை நிறுத்தப்பட்டு மீண்டும் பிற்பகல் 1 மணியளவில் ஆரம்பமானது. பகல் உணவு இடைவேளைக் குப்பின்னர் பிரதி சபா நாயகர் கீதாஞ்சன குணவர்த்தன சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருக்க விவாதம் ஆரம்பிக்கப்பட்ட போது ஆளும் தரப்பின் சார்பாக அமைச்சர் மனோ விஜயரத்ன உரையாற்றினார்.

அமைச்சர் தனது உரையை முடித்துக் கொண்டதன் பின்னர் எதிர்க்கட்சி சார்பில் விவாதத்தில் உரையாற்றவிருந்த சுனில் ஹந்து நெத்தி, ரவி கருணா நாயக்க எம்.பிக்களின் பெயர்களை பிரதி சபாநாயகர் அறிவித்தார்.

எனினும் அவர்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. இதனையடுத்து உரையாற்றவிருந்த அமைச்சர் மஹிந்தாநந்த அளுத்கமகே உரையாற்று வதற்கு தயாராக இருந்த போதும் சபையின் பூரண அனுமதியுடன் சபையின் நேற்றைய நடவடிக்கைகள் பிற்பகல் 1.40 மணியளவில் நிறைவடைந்தன.

சபை நடவடிக்கைகள் திங்கட்சிகழமை ஆரம்பிக்கபட்டதிலிருந்து நிறைவடையும் வரையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைபை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கள் எவருமே சபைக்கு சமுகமளிக்க வில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பராளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருக்காமை இதுவே முதல் தடவையாகும். (அ-5)




காரை நகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமூர்த்தி அதிகாரசபையின் சர்வ தேச எழுத்தறிவு தினம் சர்வதேச சிறுவர்தினம், முதியோர் தினம் என்பன சிறப்பாக கொண்டாடப்பட்டன. இதில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர். ரி. ஜெயசீலன் தலைமையுரை நிகழ்த்துவதனையும் பிரதமவிருந்தினர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, பணிமனை கணக்காளர் வே. இராசநாயகம் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் , காரைநகர் சமூர்த்தி வங்கி முகாமையாளர் தி. சசிக்குமார் வறிய மாணவருக்கு பாடசாலை உபகரணம் வழங்குவதனையும் படத்தில் காணலாம் (ப.ஜங்கரன்)

# இலங்கையில் மனித உரிமைகள் அன்றாடம் மீறப்பட்டு வருகின்றன

## சர்வதேச ஜனநாயக ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களின் உயிர் வாழும் உரிமை மீறப்படுவதும் கடத்தல் உள்ளட்ட மோசமான மனித உரிமை மீறல்களும் இலங்கையில் அன்றாடம் இடம்பெற்று வருவதாக சர்வதேச ஜனநாயக ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.


சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் நிர்வாகக் குழுக்கூட்டம் கடந்த முதலாம் திகதி சான் சல்வடோரில் நடைபெற்றது. அதில் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடத்தல்கள், காணாமல் போதல்கள் உள்ளிட்ட மீறல்கள் நாளாந்தம் இடம்பெற்றுவருகின்றன. மக்களின் உயிர்வாழும் உரிமையும் விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமையும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன.

அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கைக்கு ஐக்கிய தேசியக்கட்சி தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# குரு பெயர்ச்சி



## துலாம்

(சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி விசாகம் 1,2,3 பாதங்கள்

**16-11-2007 முதல் 30-11-2008 வரை**

(பெயரின் முதல் எழுத்துக்கள் ர, ரி, ரு, ரே, த, தி.து, தே உள்ளவர்களுக்கும்)

**முன்னேற்றத்தை வழங்கும் மூன்றாமிடத்து குரு!**

சட்ட நுணுக்கங்களை தெரிந்து வைத்துக் கொண்டு திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர்களாக விளங்கும் துலாம் ராசி நேயர்களே!

குருப்பெயர்ச்சியில் உங்களுக்கு கொடுக்கும் யோகம் அதிகமாக இருந்தாலும் அதைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உங்கள் சுய ஜாதகத்தைப் பொறுத்துத்தான் உள்ளது. என்பதை நினைவில் கொள்ளுங்கள் காரணம் உங்கள் ராசிநாதன் சுக்ரன் குருவிற்கு பகை வராக விளங்குபவர். இருப்பினும் குருப்பார் வகையில் கோடி நன்மை பெறும் ராசிகள் உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் உள்ள ராசிகளோ அந்தந்த இடங்களில் எல்லாம் நன்மைகளை வழங்கும்.

இதுவரை 2-ம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் நவம்பர் 16ஆம் திகதி முதல் மூன்றாம் இடத்தில் சஞ்சரித்து முன்னேற்றங்களை வழங்குவதற்கு உறுதுணை புரியப் போகிறார். 2-ல் குரு வந்த போது இல்லத்தில் சுப காரியம் நடைபெற்றிருக்கலாம். ஏராளமாக பணமும் புரண்டிருக்கலாம். ஆனால் மூன்றில் குரு வரும் பொழுது முன்னேற்றங்கள் எந்த அளவு இருக்கும் என்பதை மற்ற கிரகங்கள் அதைப் பார்க்கும் அமைப்பை பொறுத்தே அமையப் போகிறது. இருப்பினும் நீங்கள் முறையாக குரு வழி பாட்டை மேற்கொண்டால் மூன்றாமிடத்து குரு முக்கியப் புள்ளிகளில் ஒருவராக உங்களை மாற்றிக் காட்டும்.

**பிறர் மனம் புண்படாமல் பேசுபவர்**

நீதிக்கும் நேர்மைக்கும் நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நேசிப்பவர்களின் மனம் புண்படக் கூடாது என்று நினைப்பீர்கள். வாசனை திரவியங்களில் உங்கள் மனம் லயிக்கும். வளர்ச்சியிலேயே குறிக்கோளாக இருப்பீர்கள். பூஜை புனஸ்காரங்களில் தேவைப்படும் பொழுது மட்டும் ஈடுபாடு செலுத்துவீர்கள் புதியவர்களின் வரவு உங்களுக்குப் பிடிக்கும்.

ஆசைகளை அதிகம் கொண்டவர்கள் நீங்கள் அன்பளிப்பு என்று எதையாவது ஒன்றை கொடுத்து தான் அடுத்தவர்களை நீங்கள் சந்திப்பீர்கள். மண் புழு போல நீங்கள் வளைந்து நெளிந்து செல்வதால் வாழ்க்கைப் பயணம் சிறப்பாக இருக்கிறது. வாக்குறுதி கொடுத்தால் தவறமாட்டீர்கள். நம்பி வந்தவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நல்ல எண்ணம் உங்களுக்கு உண்டு. அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உங்களுக்கு அதிஷ்ட வாய்ப்புக்கள் திருமணத்தின் மூலமே வந்து சேருகின்றது. பொருத்தம் பார்த்து திருமணம் செய்தால் வருத்தம் இல்லாத வாழ்க்கை அமையும். தம்பதியர் ஜாதகத்தில் சுக்கிரபலம் சம அளவு இருந்தால் இன்பங்கள் நாளும் இல்லம் வந்து சேரும். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் கலைஞன் என்றும் களத்ரகாரகன் என்றும் வர்ணிக்கப்படுபவர். எனவே சுக போகங்களைத் தரும் சுக்கிரனின் சாராபலத்திற்கு ஏற்ப படிப்பு தொழில் போன்வற்றை தேர்ந்தெடுத்துக்கொள்வதோடு அதற்கு நட்புக்கிரகத்தின் எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக்கொண்டால் உலகப் புகழ் பெற்றவராக நீங்கள் மாற முடியும்.

**குரு பார்வையால் குடும்பத்தில் மகிழ்ச்சி**

குரு இதுவரை 2ஆம் இடத்தில் சஞ் சரித்து வந்தார். இப்பொழு 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார் அதன் பார்வை 7,9,11ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே வர்த்தகம், வெளி நாட்டு முயற்சி விவாகம் உடல் நிலை, குடும்பப்பிரச்சினை, விலங்கு வளர்ப்பு, இழந்த பொருளை ஈடுகட்டுதல், பெண்வழிப் பிரச்சினை, தீர்த்த யாத்திரை. தந்தை வழி உறவு, தானதர்மம் செய்தல் பணப்புழக்கம், கொள்கைப்பிடிப்பு, வாகன யோகம். சான்றோர் சந்திப்பு, சகோதார இலாபம், ஆடை-ஆபரண சேர்க்கை, கலைத்திறமை, விவேகம், காரிய வெற்றி போன்றவற்றிற்கு காரணகர்த்தாவாக விளங்கும் குரு மேற்கண்ட செயல்களில் எல்லாம் மாற்றங்களை கொடுக்கப் போகிறார் தசா புத்தி பலம் பெற்றவர்களுக்கு நல்ல மாற்றங்கள் உருவாகும்.

**இழப்புக்களை ஈடு செய்யும் வாய்ப்பு**

சென்ற ஆண்டு 2இல் குரு சஞ்சரித்த போழுது எதிர்ப்புகளுக்கு மத்தியில் உங்கள் வாழ்க்கை அமைந்திருக்கலாம். அப்பொழுது அந்த நிலை மாறி ஆனந்த வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தைரியமும், தன்னம்பிக்கையும் குடி கொள்ளும். சொந்த பந்தங்கள் செய்யாத உதவியை வந்த நண்பர்கள் செய்து கொடுப்பர். இனி உங்கள் வீட்டில் சத்தங்களும் யுத்தங்களும் குறையும் சொத்துப்பிரச்சினைகள் சுமூகமாக முடியும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வீர்கள். சுப விரயங்கள் அதிகரிக்கும் கல்யாணக்கனவுகளை நனவாக்கும் போது சனி ஆதிக்கம் இல்லையா என்று பார்த்துச்செய்வது நல்லது. தந்தை வழி சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதில் சகோதாரர்

# உங்களுக்கு எப்படி?

கள் தடையாக இதுவரை இருந்திருக்கலாம். இனி அந்த நிலைமாறும். எந்த வழியில் உங்களுக்கு பெற்றோர்களால் பெருமை வந்துசேரும். வீடு மாற்றமும் வாகன மாற்றமும் விரும்பிய படி அமையும். சொல்லை செயலாக்கி காட்டுவதில் இருந்த தடை அகல சுக்கிர வழிபாட்டையும் தொடர்ந்து மேற்கொள்வது நல்லது.

**கைகொடுக்கும் தெய்வ வழிபாடு**

தேக நலன் சீராக அமைய தெய்வ வழிபாடுகளும் கைகொடுக்கும். மாற்று மருத்துவமும் உங்களுக்கு மகிழ்ச்சியை வழங்கும். தூரதேசத்தில் இருந்து வரும் செய்திகள் உங்களதுயரங்களுக்கு வடிகாலாக அமையும். வீடு. மனை என்றும் வாங்கும் வாய்ப்புக்களோ அல்லது கட்டிய வீட்டை பழுது பார்த்து கனிவோடு குடியேறும் சூழ் நிலையோ உருவாகும். புனித விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். தொழில் தொடங்க போதிய வசதி இல்லையே என்று நினைத்தவர்களுக்கு கூட்டாளிகள் பணம் கொடுத்து உதவ முன்வருவர்.

வீட்டு உறுப்பினர்கள் திருப்தியடையும் விதத்தில் வியாழ பகவான் உங்களுக்கு வருமானத்தை கொடுக்க வருகிறார். மாற்றுக் கருத்து உடையோர் மனம் மாறுவார். நடக்காது என்று நினைத்த சில காரியங்கள் இப்போது நடப்பது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். முன்னோர் வழி சொத்துக்களை முறையாகப் பிரித்து கொடுக்க பெற்றோர்கள் முன்வருவர். அந்த சொத்துக்களை விற்று அதன் மூலம் வருமானத்தில் புதிய சொத்துக்களை வாங்கி மகிழும் வாய்ப்பு ஒரு சிலருக்கும் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க பங்குதாரர்களை இணைத்துக் கொள்ளும் பொழுது அவர்களும் சுக்கிர பலம் பெற்றவர்களாக இருக்கிறார்களா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**பொருளாதார நிலை**

சுய ஜாதகத்தின் சுக்கிரன் மற்றும் குருவின் பலம் அறிந்து அது இருக்கும் இடத்தையும் அது பார்க்கும் கிரகத்தையும் வைத்து ஆராய்ந்து அதற்கேற்ற ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டுவந்தால் சிக்கல்களில் இருந்து விடுபட்டு செழிப்பான வாழ்க்கையை காணலாம். பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். லாபஸ்தானத்தை குரு பார்த்தால் பொருளாதார நிலை உயரும். உங்கள் உள்ளத்தில் எண்ணிய எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். அரசியல் வாதிகளின் ஒத்துழைப்போடு அரிய பல காரியங்களை செய்து முடிப்பீர்கள். வரவை அதிகரிக்க வைக்க வழிபாடுகள் தான் உறுதியாக இருக்கும்.

**மகரகுருவால் ஏற்படும் மாற்றம்**
**(23.04.2008 முதல்04.06.2008 வரை)**

தனுசு ராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் ஏப்ரல் மாதம் மகர ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அதன் பார்வை உங்கள் ராசிக்கும் 8,10,12 ஆகிய இடங்களில் பதிவதால் நற்பலன்கள் அதிகரிக்கும் நேரமாக இதைக்கருதலாம். மருத்துவச்செலவு குறையும் மகிழ்ச்சி அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ் கூடும் மதிப்பும் மரியாதையும் உயரும். மறக்க முடியாத் சம்பவங்கள் நடைபெறும். பயணம் பலன் தரும். பக்கத்தில் இருப்பவர்களோடு ஏற்பட்ட பகை மாறும்.

**வளர்ச்சியைக்கூட்டும் வார வழிபாடு**

வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள் கிழக்கு நோக் கிய அம்பிகையை வழிபட்டால் கீர்த்தி மேலோங்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் குரு எந்த நாளும் இனிய நாளாக மாற்றி அமைக்க மதுரையில் உள்ள நன்மை தருவார் கோயிலுக்குச் சென்று அங்குள்ள நந்தீஸ்வரையும் நன்மை தருவாரையும் மத்தியபுரி அம் மனையும் வழிபட்டு அருகில் இருக்கும் தட்சிணா மூர்த்தியையும் வணங்கி வாருங்கள். சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

**உடன்பிறப்புகள் ஒத்துவரும் நேரம்**

குருஉங்கள் ராசிக்கு 3,6 க்கு அதிபதியாக விளங்குகிறார். அவர் தனது சொந்த வீடான மூன்றாமிடத்தில் உலாவரும் பொழுது, உடன்பிறப்புக்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். கடன் சுமை குறைய வழி காட்டுவர். மட மட வென்று காரியங்கள் நடைபெற்றுக் கொண்டே வரும். மதிப்பும் மரியாதையும் உயரும். தடைகள் அகல தக்க விதத்தில் வரும் குருவிற்கு வரவேற்பு கொடுப்பது நல்லது. குறிப்பாக பெரியவர்கள், சான்றோர்கள், ஆன்மீகத்தில் அதிகம் திளைத்தவர்களின் ஆசிகளை பெற்றுக் கொள்வது நல்லது.

மன்னவன் மூன்றில் நிற்க
மாபெரும் மாற்றம் தோன்றும்!
தன்னம்பிக்கையுடன்
தைரியமும் இணைந்திருந்தால்
எண்ணிய காரியங்கள்
எல்லாமும் வெற்றி பெறும்!
பொன்னவன் குருவை நாளும்
போற்றினால் நன்மை உண்டாகும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் மூன்றில் சஞ்சரிக்கும் குருவால் முன்னேற்றங்கள் அதிகரிக்கும் என்றாலும் வேண்டிய நற்பலன்கள் கிடைக்க வியாழ பகவானை விரதமிருந்து வழிபட்டு வருவது நல்லது. அப்பொழுது உங்கள் திட்டங்கள் நிறைவேறி, தித்திக்கும் வாழ்க்கை அமையும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்**
**(5.4. 2008முதல் 20.9.2008 வரை)**

குரு வக்ர காலம் உங்களுக்கு நன்மைகளை வழங்கும் என்று சொல்ல வேண்டும். இருப்பினும் 3 இடத்திற்கு அதிபதியாக இருப்பதால் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளும் வந்து சேரலாம். எந்நாளும் உங்களுக்கு லாபம் கிடைக்க எதிரிகளின் பலம் குறைய பொன்னவன் குருவை போற்றி வணங்குங்கள் எதிரிகளை இக்காலத்தில் அனுசரித்துச் சென் றால் எண்ணற்ற நற்பலன்களை காண இயலும். உத்தியோகம், தொழில் போன்வற்றில் உடன் இருப்பவர்களால் சில உபத்திரவங்களை சந்திக்க இயலும் நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் மீண்டும் உங்களிடமே வரலாம். ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்க எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி செலுத்துவது நல்லது.

**துலாம் ராசிப்பெண்களுக்கு சுப விரயம் அதிகரிக்கும்**

துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சியால் உடன் பிறப்புக்கள் வழியே ஒத்துழைப்பு கிடைக்கும். ஆடை ஆபரண செயற்கை அதிகரிக்கும். கணவன் -மனைவிக்குள் இருந்த கருத்துவேறு பாடுகள் அகலும். பிள்ளைகளின் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள் பழைய சடங்கு, சம்பிரதாயங்களை நம்பிக்கை கூடும். வீடு சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் பாதியில் நிற்கலாம். பிறகுருக்குச் பொறுப்புச் சொல்லி வாங்கி கொடுத்த தொகை பெரும் பிரயாசையின் பேரில் வந்து சேரலாம். குருவின் வக்கிர காலத்தில் குழந்தைகளாலும் உடன் பிறப்புக்களாலும் தொல்லைகளை சந்திக்க நேரிடும் மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு உருவாகலாம். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச்சென்றால்த்தான் வருமானம் வருவதில் தடைகள் ஏற்படாது.

## பற்சிகிச்சை முகாம்

(பருத்தித்துறை)

புலோலி மந்திகை சத்தியசாயி சேவா நிலையத்தினர் அல்வாய் கிழக்குப் பிரதேச மாணவர்களின் நன்மை கருதி அல்வாய் கிழக்கு அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் மாணவர்களுக்கான "பற்சிகிச்சை" முகாம் ஒன்றை நடாத்தியது. இப்பற்சிகிச்சை முகாமிலே பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை பல்வைத்திய நிபுணர். வைத்திய கலாநிதி எஸ். ஜெயராஜா பற்சிகிச்சைகளை வழங்கினார்.

இங்கு மாணவர்களுக்கு சத்துணவு வகைகளும் சத்தியசாயி சேவாநிலையுத்தினரால் வழங்கப்பட்டது. (அ-52)

## கந்தசஷ்டி மஹோற்சவம்

(பருத்தித்துறை)

அருள்மிகு பொலிகண்டி கந்தவன ஆலய கந்தஷஷ்டி மஹோற்சவம் 10 ஆம் திகதி பகல் 1 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தாரகன் போரும், 14 ஆம் திகதி புதன்கிழமை சிங்கன் போரும், 15 ஆம் திகதி வியாழக்கிழமை சூரன் போரும், 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தமும் மாலை 3 மணிக்கு கொடியிறக்கமும் சனிக்கிழமை திருக்கல்யாணமும் இடம் பெறும். காலைப்பூசைகள் 10 தொடக்கம் 1மணி வரை மாலைப்பூசைகள் 3 மணி தொடக்கம் 5மணி வரையும் இடம் பெறவுள்ளன. இங்கு இடம்பெறும் பூசை முறைகள் யாவும் திருச்செந்தூர் பூசைமுறைகளையே ஒத்ததாகும்.

கந்தஷஷ்டி பூசைக் காலங்களில் நாள் தோறும் சமயச் சொற் பொழிவுகள் இடம்பெறவுள்ளன. சூரன்வதை படனமும் படிக்கப்படும். (அ-52)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளில் எதிர்வரும் 11 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை "திருவருட்பயன்" பற்றி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை இரத்தப் பரிசோதகர் எஸ். தேவன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (அ-52)

## கண்காட்சியும் மலிவு விற்பனையும்

(பருத்தித்துறை)

சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தால் வெளியிடப்பட்டு வரும் ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயத்தின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவ்அரிய நூலான ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயத்தின் கடந்த மாத மலர் ஒரு இலட்சத்தைத்தாண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருவதாகவும் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி தி. சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (அ-52)

## தமிழ் மொழித் தினம்-2007

(அல்வாய்)

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திற்கான அகில இலங்கை தமிழ்த் தினம்-2007 இம் மாதம் 17 , 18 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்வில் பங்கு பற்றவுள்ள பருத்தித்துறைக் கோட்டத்திற்குள் உள்ள முப்பத்தொரு பாடசாலைகளும் பங்கு பற்றலாம். விண்ணப்பப்படிவங்களை உடன் இரு பிரதிகளில் கோட்டக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப் பாளர் பா. இரகுநாதன் அறிவித்துள்ளார். (அ-19)

## கலைத்திட்ட மாற்ற செயலமர்வு -இந்துசமயம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய பாடத்தின் புதிய கலைத்திட்ட மாற்ற செயலமர்வு கள் நடை பெறவுள்ளன. தரம் -7 தரம்-11 ஆகிய வகுப்புக்களுக்கான செயலமர்வு இம்மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச் செயலமர்வுக்கு யாழ்ப் பாணக் கல்வி வலய வளவாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (6)

# முரளியின் சாதனைக்கு காத்திருக்கும் சோதனை!

அவுஸ்திரேலிய மண்ணில் சாதனை படைக்கும் ஆசையுடன் காலடி எடுத்து வைத்துள்ள முரளிதனுக்கு நிறைய சோதனைகள் காத்திருக்கின்றன. இவர் இன்னும் 9விக்கெற் வீழ்த்தினால் ஷேன் வோர்ன் சாதனையை



முறியடித்துவிடலாம். இதனை தடுக்க பொண்டிங்படை அதிரடி திட்டங்களை தீட்டியுள்ளதாம். முதல் கட்டமாக வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற ஆடுங்கள் அமைக்கப்படவுள்ளன.

அடுத்ததாக ரசிகர்களின் கோஷம் பந்தை எறிவது போன்ற புகார்கள் முரளிதரனுக்கு சிக்கலை ஏற்படுத்தலாம். அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் நாளை பிரிஸ்பேனில் ஆரம்மாகிறது. இத்தொடரில் இலங்கையின் ''சூழல் மன்னன்'' முரளிதரன் பங்கேற்க வேண்டா மென முன்னாள் அணித்தலைவர் ரண துங்கா உள்ளிட்ட பலர் கேட்டுக்கொண்டனர்.

ஏனென்றால் முரளிதரனை பொறுத்த வரை அவுஸ்திரேலிய தொடர் எப்போதுமே சர்ச்சை நிறைந்தது. கடந்த 1995இல் இவர் பந்தை எறிவதாக புகார் கூற டெஸ்ட் தொடரில் முழுமையாக பங்கேற்க இயலவில்லை. பின்னர் 2004இல் இவர் பந்தை எறிகிறார் என்று அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்டு வெளிப்படையாக குற்றம்சாட்ட அந்த தொடரை புறக்கணித்தார். தவிர ரசிகர்களுக்கும் இவருக்கும் எதிராக கோஷங்கள் எழுப்புவதை வாடிக்கையாக கொண்டிருந்ததால் அவுஸ்திரேலிய பயணத்தை தவிர்த்து வந்தார்.

இந்தச் சூழலில் மிக நீண்ட இடைவெளிக்கு பிறகு இம்முறை அவுஸ்திரேலியாவுக்கு முந்தைய சர்ச்சைகளை மறந்து சென்றுள்ளார். தற்போது 700 விக்கெற் வீழ்த்தியுள்ள முரளிதரன், இன்னும் 9விக்கெற் வீழ்த்தினால் அவுஸ்திரேலியாவின் சூழல் புயல் ஷேன் வோர்னை (708 விக்) முந்தி முதலிடத்தை பிடித்துவிடலாம்.

இந்த சாதனையை எட்ட முரளிதரன் பல்வேறு தடைகளை கடக்கவேண்டியிருக்கும். தங்களது மண்ணில் இந்த மைல் கல்லை எட்ட அனுமதிக்க மாட்டோம் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் சவால் விடுத்துள்ளார்.

**சர்ச்சை மன்னர்கள்**

டெஸ்ட் போட்டிகளில் முரளிதரன், வோர்ன் இடையே நீண்ட காலமாக போட்டி நிலவி வந்தது. அதிக விக்கெற் வீழ்த்தியவர்கள் வரிசையில் இருவரும் மாறி மாறி முதலிடம் பெற்ற வந்தனர். இருவருமே சர்ச்சைகளில் தொடர்ந்து சிக்கினர். 1992டெஸ்ட் போட்டியில் அறிமுகமான முரளிதரன் மீது பந்தை எறிவதாக குற்றம்சாட்டப்பட்டது. பிறப்பில் உள்ள குறைபாடு காரணமாக இவரால் கையை முழுமையாக நீட்டி பந்துவீச முடிவதில்லை என்று விளக்கம் தரப்பட்டது.

பின்னர் ஐ.சி.சி. அனுமதி வழங்க சிறந்த ஒப்ஸ்பின்னராக ஜொலித்தார். இதேபோல 1992இல் டெஸ்ட் போட்டியில் அறிமுகமான வோர்ன் தனிப்பட்ட வாழ்க்கையில் பல பிரச்சினைகளை சந்தித்தார். பெண்களுடன் தொடர்பு, மனைவி விவாகரத்து ஊக்க மருந்து தடை உள்ளிட்ட சர்ச்சைகளை கடந்து சிறந்த ''லெக்ஸ்பின்னராக'' சாதித்தார். டெஸ்ட் போட்டிகளில் 700 விக்கெற்றுக்கள் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். இவர் சர்வதேச கிரிக்கெற்றில் இருந்து ஓய்வுபெற்ற நிலையில், இந்த சாதனையை தகர்க்க முரளி காத்திருக்கிறார்.

**முரளி கலக்கல்**

இருவரையும் ஒப்பிடுகையில் 35 வயதான முரளிதரன் குறைந்த போட்டிகளில் அதிக விக்கெற் வீழ்த்தியுள்ளார். இவர் 113 டெஸ்டில் 700 விக்கெற் வீழ்த்தி இரண்டாம் இடத்தில் உள்ளார். வோர்ன் 145 டெஸ்டில் 708 விக்கெற்றுக்களுடன் முதலிடத்தில் இருக்கிறார். இந்தியாவின் கும்ளே 118 போட்டிகளில் 566 விக்கெற்றுக்களுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

முரளிதரனே ஒரு போட்டிக்கு சராசரியாக 6 விக்கெற்றுக்களுக்கு மேல் வீழ்த்தியுள்ளார். அப்படி பார்த்தால் அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள இரண்டு டெஸ்டில் சாதனைக்கு தேவையான 9 விக்கெற்றுக்களை எளிதில் வீழ்த்திவிடலாம். ஆனாலும் அவுஸ்திரேலிய மண்ணில் இதுவரை 3 டெஸ்ட் போட்டிகளில் 8 விக்கெற் மட்டுமே வீழ்த்தியுள்ளது சற்று பின்னடைவான விஷயம்.

**ஆடுகளம் வேகம்**

முரளிதரனை சமாளிக்க இம்முறை போட்டி நடக்கும் பிரிஸ்பேன், ஹோபார்ட் ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் சுழலுக்கு வேலையில்லாமல் செய்துவிடலாம் என்று அவுஸ்திரேலியா தரப்பில் திட்டம் போடப்பட்டுள்ளது. ஆனாலும் எந்த ஆடுகளத்திலும் விக்கெற் வீழ்த்தும் திறமை முரளிக்கு உள்ளது என்று இலங்கை சார்பில் பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து ரசிகர் களின் கோஷம் முரளிக்கு சிக்கலை ஏற்படுத் தலாம். சமீபத்திய இந்திய



தொடரின் போது ரசிகர்கள் சைமண்ட்சை கேலி செய்தனர்.

இதற்கு பழி தீர்க்க காத்திருக்கும் அவுஸ்திரேலிய ரசிகர்கள் முரளிதரனை ஒருகை பார்க்கலாம். இதை தவிர இவரது பந்துவீச்சு பற்றி டேரல் ஹேர் போன்று அம்பயர்கள் வீண் புகார் சொல்லாமல் இருக்க வேண்டும். இது

அமிர்தன்

போன்ற தடைகளை எல்லாம் தகர்த்து டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெற் வீழ்த்தியவர் என்ற சாதனையை முரளிதரன் படைப்பார் என நம்புவோம்.

## அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் மிரட்டலின் எதிரொலி இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலக முஷாரப் முடிவு

பாகிஸ்தானில் முஷாரப்அவசரகால சட்டம் கொண்டு வந்ததற்கு நாட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. பல இடங்களில் மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். வக்கீல்களும் முஷாரப்புக்கு எதிராக களத்தில் இறங்கியுள்ளனர். அவசரகால சட்டத்திற்கு அமெரிக்கா,



இங்கிலாந்து உட்பட பெரும் பாலான நாடுகள் கண்டனம் தெரிவித்துள் ளன.

எனவே தனது நிலைமையை விளக்குவதற்காக முஷாரப் பாகிஸ்தானில் உள்ள அனைத்து வெளிநாட்டுத்தூதர்களின் கூட்டத்தைக் கூட்டினார். அவர்களிடம் நாடு மோசமான நிலையில் சென்று கொண்டிருப்பதால் அதிலிருந்து காப்பாற்றவே அவசரகால சட்டத்தைக் கொண்டுவந்தேன் என்று கூறினார்.

உலக தரிசனம்

இந்த விளக்கத்தை வெளிநாட்டுத்தூதர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உங்களுக்கு நாட்டில் எதிர்ப்பு அதிகமாகிவிட்டது. எனவே உங்களால் தொடர்ந்து நாட்டை ஆட்சி செய்வது கடினம்.

எனவே நாட்டை விட்டு வெளியேறிவிடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் இந்தக்கருத்தை முஷாரப் ஏற்றுக் கொள்ளவில்லை நான் சரியான நடவடிக்கை எடுத்துள்ளேன்.. குறிப்பிட்ட காலம் வரை அவசரகால சட்டம் இருந்தால் நாட்டை உரிய பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என்று பிடிவாதமாகப் பேசினார். அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் முஷாரப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் கூறிய தாவது,

பாகிஸ்தானில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரவேண்டாம் என்று நான் ஏற்கனவே முஷாரப்பிடம் கூறியிருந்தேன். ஆனால் அவர் அதை கேட்காமல் நடந்து கொண்டுள்ளார்.

இது ஜனநாயகத்திற்கு எதிரானது அவர் இராணுவத்தளபதி பதவியை கைவிட வேண்டும் மீண்டும் பாகிஸ்தானில் ஜனநாயகத்தையும் கொண்டுவரவேண்டும். அதற்காக திட்டமிட்டபடி பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும். நாங்கள் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளை ஒழிக்கவேண்டும் என்று அவரை தொடர்ந்து வற்புறுத்துகிறோம் இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து முஷாரப் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது, நான் இராணுவத்தளபதி பத வியிலிருந்து விலகுவது என்ற முடிபை எடுத்துள்ளேன் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகம் கொண்டுவரப்படும் மக்கள் ஆட்சியே இனி இருக்கும் குறுகிய காலம் மட்டுமே அவசரகாலச் சட்டம் நீடிக்கும். பாராளுமன்ற தேர்தலையும் விரைவில் நடத்துவேன் நான் இனி மக் கள் ஜனாதிபதியாக இருப்பேன் இவ்வாறு முஷாரப் கூறினார். (அ-5)

## அவசரகால சட்டம் பிரகடனம் முஷாரப் முடிவுக்கு புஷ் ஆதரவு!

### பாகிஸ்தானில் நாளிதழில் தெரிவிப்பு

(கராச்சி)

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் ஆதரவு பெற்றே பாகிஸ்தானில் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டு நாளிதழ் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் முஷாரப்புக்கு எதிராக எதிர்ப்பு வலுத்த நிலையில் அவர் அவசரகால சட்டத்தை பிரகடனம் செய்துள்ளார். உலக நாடுகள் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளன. அமெரிக்காவும் அவசரகால சட்ட அறிவிப்பை அரசியல் சாசனத்திற்கு விரோதமானது என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானிலிருந்து வெளியாகும். "தி நேஷன்" என்ற நாளிதழ் முஷாரப்பின் இந்த முடிபு அமெரிக்க அதிபர் புஷ்ஷின் சம்மதத்தை பெற்ற பிறகே எடுக்கப்பட்டது என்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் புஷ் அவசரகால சட்ட



பிரகடனத்திற்கு எதிராக இருந்தாலும் பாகிஸ்தானில் அதிகரித்து வரும் வன்முறையை கட்டுப்படுத்த இதற்கு ஒப்புக்கொண்டதாக அந்த நாளிதழ் தெரிவிக்கிறது.




பாகிஸ்தானில் அவசரகால சட்டம் அறிவிக்கப்பட்டதை கண்டித்து லாகூரில் வக்கீல் கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட வக்கீல்களை பொலிஸார் தடியடி நடத்தியும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கலைந்து போகச் செய்தனர்.

## பாகிஸ்தானில் உள்நாட்டு கலவரம் மூளும் அபாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அதிபர் முஷாரப் அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தி முக்கிய எதிர்க்கட்சியினரை கைதுசெய்துள்ளார். அவசர கால சட்டம் நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சர்வதேச நாடுகளும் இதனை கண்டித்துள்ளன. உள்நாட்டில் அவசர கால சட்டத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தினார்கள். இதற்கிடையே இராணுவத்தினருக்கும் அவசரகால சட்டம் பிடிக்கவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது. இதனால் பாகிஸ்தானில் உள்நாட்டு கலவரம் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்திய எல்லையில் இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-5)

நியாயமற்ற பிரமாணங்கள் செய்வதும் தவறு. அதனைக் காப்பது அதனினும் தவறு.

*-அப்துற் ரஹீம்*

வலம்புரி

# பாகிஸ்தானில் நடக்கும் அராஜகத் தாண்டவம்

காலனித்துவ ஆட்சியில் அகப்பட்ட நாடுகள் சுதந்திரம் அடைந்தாலும் அவை உள்நாட்டில் கலக நாடுகளாகவே காணப்படுகின்றன.

காலனித்துவ ஆட்சியாளர்களின் சுரண்டல் தனமும் அந்த நாடுகளில் இருந்த மரபுவழி ஆட்சி அமைவில் புகுத்தப்பட்ட சட்டதிட்டங்களும் திரண்டு சுதந்திரத்திற்குப் பின்னான உள்நாட்டு கலகங்களை தோற்றுவித்துள்ளன.

இதிலிருந்து அந்நாடுகள் விடுபடுவதற்கு பொருளாதார பலம் போதாமையும், அண்டை நாடுகளுடனான ஒற்றுமையீனங்களும் மீண்டும் காலனித்துவ ஆட்சியாளர்களின் உதவியில், ஆலோசனையில் இயங்க வேண்டிய சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது. இதற்கு இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளை குறிப்பிட்டுக் கூறலாம்.

இலங்கையில் காலனித்துவத்திற்கு முன்னர் இருந்த ஆட்சி அதிகாரங்கள் அந்நியர் ஆட்சியில் சீர்குலைக்கப்பட்டது.

அதன் பின்னர் நாட்டை விட்டு வெளியேறும் போது தாம் நடைமுறைப்படுத்திய சட்ட அதிகாரங்களுடன் ஒரு தரப்பிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு சென்றதால் இன்று இனயுத்தம் மனித உயிர்களை நாளாந்தம் பதம் பார்க்கிறது. இதேநிலைதான் பாகிஸ்தானிலும் அரங்கேறி இன்று அந்த நாடு இராணுவமயப்பட்டு, ஜனநாயக விழுமியங்களை அடியோடு இழந்துபோய் வன்முறைகளும், உயிர்ப் பறிப்புக்களும் நடந்தவண்ணமுள்ளன.

இராணுவப் புரட்சியாளர் முஷாரப்பினால் அந் நாட்டில் மனித உயிர்கள் தினசரி மடிகின்றன. இதற்கெல்லம் பின்புலமாக நின்று செயற்படுவது அமெரிக்கா என்பது மறுக்க முடியாத உண்மை.

நீதிபரிபாலனத்தை அமுக்குவதற்காக அதிபர் முஷாரப் பாகிஸ்தானில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார். இதனால் நீதிபதிகள் கூட பாதுகாப்பற்றவர்களாக இருக்கின்றனர். முஷாரப்பின் அநீதியை எதிர்க்கும் சட்டத்தரணிகளை பொலிஸார் அடித்துத் துன்புறுத்துகின்றனர். இவற்றால் அந்நாட்டில் எங்கும் அவலம், பதற்றம் அழிவு. இப்போது இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து விலகுமாறு அமெரிக்கா கேட்கிறது.எப்படியிருக்கிறது அந்த நாட்டின் நாடகம்?

பாகிஸ்தானின் ஜனநாயக ஆட்சியைக் கவிழ்த்த போது முஷாரப்பை அமெரிக்கா கண்டித்திருந்தால் அதை வரவேற்கலாம். இதை விடுத்து முஷாரப்பின் மூலமாக பாகிஸ்தானின் இயல்பு நிலையை பாழாக்கிய அமெரிக்கா இப்போது கருத்துக் கூறுவது, இராணுவத் தளபதி இப்பதவியில் இருந்து விலகுமாறு கேட்பது எல்லாம் வெறும் நாடகமே அன்றி அதில் உண்மைகள் ஏதுமில்லை.

இத்தகைய துன்ப நிலையே இலங்கையிலும் காணப்படுகிறது. இங்கும் அவசரகாலச்சட்டத்தின் பேரில் அவலங்கள் தொடர்கின்றன.

# நிபந்தனையின் அடிப்படையிலேயே இலங்கைக்கு அமெரிக்கா உதவி

## சட்ட சபை உறுப்பினர் பற்றிக் லீஹி அறிக்கை

இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகள் வெறும் வெற்றுக்காசோலையல்ல என்றும் நாட்டின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தாத விடத்து நிதி உதவிகள் வழங்கப்படமாட்டாது என்றும் அமெரிக்க சட்ட சபை உறுப்பினர் பற்றிக் லீஹி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டில் தொடரும் இனப்பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் காரணமாகவே அமெரிக்க மிலேனிய நிதி உதவிப் பட்டியலில் இருந்து இலங்கை தகுதியற்ற நாடாக கணிக்கப்பட்டுள்ளது.

மோசமடைந்து வரும் பாதுகாப்பு நிலைவரங்கள் காரணமாகவே இலங்கைக்கு வழங்கவிருந்த 11 மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா இடைநிறுத்தியுள்ளது. மேலும் இரு தரப்பினர்களுக்கிடையிலான மோதலின் போது பொது மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான தகவல்களை அடுத்தே 2008 ஆம் ஆண்டிற்கான வெளிவிவகார ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி 3 நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன. மனித உரிமை மீறல் சம்பவங்களேதும் இடம்பெறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் இலங்கை அரசாங்கத்தின் நீதித்துறையினரின் முன்னிறுத்தப்பட்டு உரிய தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் . மனித உரிமைகள் அமைப்பினரும் ஊடகவியலாளர்களும் நியாயமற்ற முறையில் நாட்டில் நடமாட முடியாது தடுக்கும் நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். ஐ.நா சபையின் மனித உரிமைகள் உயர்ஸ் தானிகராலய ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் அமைக்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பதே அம் மூன்று நிபந்தனைகளாகும்.

மேலும் யுத்தத்தால் பாதிக்கப்படாத பிராந்தியங்களிலும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இராணுவத் துணைக்குழுக்களால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் மற்றும சிறுவர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் என்பனவற்றுக்கு அரசாங்கப் படைகளும் துணை போவதாக குற்றச்சாட்டுக்கள் கிடைத்துள்ளன.

இலங்கைக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கவே விரும்புகின்றது எனினும் நிபந்தனையற்ற முறையில் அல்ல. இனப் பிரச்சினை தொடர்பான அரசியல்தீர்வுக்கு வருதலில் உதவி புரியும் பிரதான நாடுகளுடன் இணைந்து இருதரப் புக்குமிடையிலான பேச்சுவார்த்தை நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா உதவவிரும்புகின்றது. (அ-5)

## உரிய மாகாணத்தில் நியமனம் கிடைக்காதவர்களை தொடர்புகொள்ளுமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு உரிய மாகாணங்களில் நியமனம் கிடைக்காது விடின் அவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். தாம் விண்ணப்பித்த மாகாணத்திற்குப் பதிலாக வேறு மாகாணம் கிடைக்கப் பெற்றோர் பலருக்கு அவர்கள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க சொந்த மாகாணங்களுக்கே நியமனம் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இது வரை எம்முடன் தொடர்வு கொண்டோரில் 106 பேருக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்பு கொண்டு இது வரை யாருக்காவது நியமனம் கிடைக்காவிட்டால் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். கடந்த வருடம் 106 பேருக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுக்கப்பட்டமை தெரிந்ததே. (அ-5)

## கலைத்திட்ட மாற்ற செயலமர்வுகள்-தமிழ்

புதிய கலைத்திட்ட மாற்ற செயலமர்வுகள் இம்மாதம் நடைபெறவுள்ளன . இதில் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள தரம் ஏழு வகுப்பில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தவறாது கலந்து கொள்ளுமாறுவடமராட்சி வலய கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.

* * *

புதிய கலைத்திட்ட மாற்ற செயலமர்வுகள் இம்மாதம் நடைபெறவுள்ளன. வடமராட்சி கல்வி வயயத்திலுள்ள தரம் பதினொன்று வகுப்பில் தமிழ்ப் பாடம் ,கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் 11 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணிக்கு யா/வடம ராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கு தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். புதிய தமிழ் மொழியும் இலக்கியமும் நூலின் போட்டோப் பிரதிகளும் பெற்றுக் கொள்ளலாம் என வலய க் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா. அறிவித்துள்ளார். (அ-6)

# அரசும் விடுதலைப்புலிகளும் விருப்பத்தை வெளியிட்டால் சமாதான செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படும்

## நோர்வே திட்டவட்டமாக தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுகளுக்கான தமது விருப் பத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டால் சமாதான செயற்பாடுகளை உடன டியாக ஆரம்பிப்பதற்கு தயாராகவுள்ளதாக நோர்வே திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

தமிழ்ச்செல்வனின் கொலைக்குப் பின் னர் தோன்றியுள்ள நிலைமைகள் தொடர் பாக கருத்துத் தெரிவித்த நோர்வே தூதரக பேச்சாளர் மேலும் கூறியதாவது ,

இது தொடர்பான தனது நிலைப்பாட்டை அண்மை யில் வெளியிட்டுள்ள அறிக்கையில் நோர்வே மிக தெளிவாக தெரிவித்துள்ளது.

அனுசரணையாளர்கள் என்ற நிலை யில் விடுதலைப்புலிகளுடன் தற்போதும் வழமையான தொடர்புகளை பேணி வருகின்றோம்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சமாதானச் செயற்பாடுகள் தொடர் பான தமது விருப்பத்தை வெளியிடும் பட்சத்திலேயே நோர்வே தனது பணிகளை மேற்கொள் ளும்.

சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான புதிய முயற்சியை இருதரப்பினதும் இணக்கமின்றி நோர்வே ஆரம்பிக்காது. இரு தரப் பின் நிலைப்பாட்டுக்கு மாறாக புதிய அணுகுமுறை எதனையும் நோர்வே கைக்கொள்ளப் போவதில்லை. சமாதான முயற்சிகளையும்அதுதொடர்பானபுதிய அணுகு முறையையும் ஆரம்பிப்பது அரசாங்கத் தினதும் விடுதலைப் புலிகளின தும் கைகளிலேயே தங்கியுள் ளது. (அ-5)

## வரவு-செலவுத்திட்ட விவாத நேரத்தை குறைக்க ஜெயராஜ் வலியுறுத்தல்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாத அமர்வுகளை பாதுகாப்புக்காரணங்களுக்காக குறைப்பது பற்றி அரசாங்கத்தின் பிரேரணை சம்பந்தமாக கட்சித்தலைவர்களிடம் ஓர் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் 2008க்கான வரவு-செலவுத்திட்டம் பற்றிய கலந்துரையாடலை கட்சித்தலைவர்கள் நடத்தினார்கள்.

அதில் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, சில அங்கத்தவர்களுக்கு விடுக்கப்பட்ட பயமுறுத்த சம்பவங்களை காரணம் காட்டி வரவு- செலவுத் திட்ட விவாதத்திற்கு ஒதுக்கப்பட்ட நாட்களை குறைக்க வேண்டிய தேவையுள்ளதாக வற்புறுத்திக்கூறினார். இருந்த போதும் இப் பிரேரணைக்கு கூட்டத்தில் பங்கு பற்றியவர்கள் யாரும் பச்சைக் கொடிகாட்ட வில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க கட்சி உறுப்பினர்களை அவர்களது பாதுகாப்பு பற்றி விழிப்பாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (அ-6)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த 4ஆம் திகதி முடிவடைந்தது. முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடலகமவின் தலைமையிலான இந்த ஆணைக்குழு மூதூர் தன்னார்வுப் பணியாளர்கள் கொலை உற்பட 16 சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதி நிசங்க உடலகம உட்பட உபவன்சயாப்பா , மனோரிமுத்தெடுவேகம, எஸ்.எஸ். விஜேரத்ன, கலாநிதி தேவநேசன் , நேசய்யா, திருமதி ஜெஸிமா, ஸ்மாயில், கே.சீ. லோகேஸ்வரன், ஜாவிட் யூஸுப் ஆகியோர் சுயேட்சையாக செயற்படவுள்ள இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# கனடாவில் நடந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ்ச்செல்வனின் தாயார் பங்கேற்பு



கனடாவின் ரொறன்ரோ மார்க்கம் திறந்த வெளித்திடலில் கொட்டும் மழையிலும் கடும் குளிரிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் ஒன்று திரண்டு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு உணர்வுபூர்வமான தமது இறுதி வணக்கத்தை தெரிவித்தனர்.

தாயகத்தில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் தூய விதைகுழியில் விதைக்கப்பட்ட நேற்று முன்தினம் மாலை இந் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் தாயார் விசாலாட்சி பரமு ஈகச்சுடரேற்றினார். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இரு சகோதரர்கள், சகோதரி மற்றும் உறவினர்கள் மலர் வணக்கம் செய்தனர். பல்லாயிரக்கணக்கில் கூடிய மக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மூத்த சகோதரர்களான ரவி மற்றும் சிவா ஆகியோர் வீரவணக்க உரையாற்றினர்.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் தன்மைகள் பற்றியும் அவரது கனவை நனவாக்க கனேடிய அரசாங்கம் உதவ வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். (ச-5)

## கருணா குழு அலுவலகங்களை பிள்ளையான் குழு கைப்பற்றியது

கருணா அணியிலிருந்து பிரிந்து சென்றிருந்த பிள்ளையான் அணியினர் மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அலுவலகங்களை கைப்பற்றியுள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் கருணாவை பிரிட்டிஷ் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை குடிவரவு குற்றம் ஒன்றிற்காக தடுத்து வைத்துள்ள பின்னணியில் மட்டக்களப்பு நகரில் உள்ள அவரது அணியின் அலுவலகங்கள் பலவற்றை கருணா அணியிடமிருந்து சமீபகாலத்திற்கு முன் முரண்பட்டதாக கூறப்படும் அவரது தளபதிகளில் ஒருவரான பிள்ளையான் அணியினர் கைப்பற்றியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை மட்டக்களப்பு நகரில் உள்ள கருணா குழுவின் அலுவலகங்களை பிள்ளையான் அணியினர் கைப்பற்றியதற்கு அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ஏ)

## வரவு-செலவுத்திட்ட உரையை...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்பிக்க இருக்கும் மூன்றாவது வரவு செலவுத்திட்ட உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் புறக்கணிப்பதாக முடிபெடுத்திருக்கின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் புறக்கணிப்பதற்கான பின்வரும் செயற்பாடுகளை கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வரவு செலவுத்திட்டத்தின் பொழுது கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கண்டித்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொலைகளைக் கண்டித்தும் நாம் சபையினுள் அமர்ந்து மௌனமாக சாத்வீகமாக எமது எதிர்ப்பைக் காட்டியபோது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டவர் என்று கூறப்படும் இலங்கை ஜனாதிபதி அதை கண்டுகொள்ளாமல் குறைந்தளவு ஜனநாயக முறையில் கூட அப்பிரச்சினையை அணுகாமல் அவர் தனது உரையை ஆற்றமுற்பட்டது ஜனநாயகவிரோதமானது, அநாகரிகமானதும் என்பதை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டுவதற்காகவும் வடக்குக் கிழக்கு எங்கும் பல்குழல் பீரங்கிகள் மூலமும் விமானக் குண்டு வீச்சுகள் மூலமும் அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்து மனித உரிமை மீறல்களின் உச்சகட்டத்தில் இருக்கும் அரசின் செயற்பாடுகளினுள் யுத்த வெறி பிடித்த அரசாங்கத்தாலும் அதனுடைய ஜனாதிபதியாலும் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற வரவு செலவுத்திட்டம் என்பதாலும் 2008 ஆம் ஆண்டுக்கு இந்த நாட்டின் மொத்த வருமானத்தில் 20 வீதத்தை அதாவது, 16 ஆயிரத்து 600 கோடி ரூபாவை (166.6 பில்லியன்) தமிழரை அழித்தொழிப்பதற்கு ஒதுக்கியிருப்பதாலும் வடக்கில் தமிழர்களுக்கான போக்குவரத்து வசதிகளைத் துண்டித்து ஏ-9 நெடுஞ்சாலையை மூடி தமிழ் மக்களை திறந்த வெளிச்சிறைச்சாலைக்குள் வைத்திருப்பது, உயிலங்குளம் வீதியை மூடி மன்னார் மாவட்ட மக்களின் போக்குவரத்தை துண்டித்திருப்பது, கிழக்கு மாகாணத்தில் 300 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகவும் மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேசத்தில் மக்கள் அகதிகளாகி அல்லல்பட காரண கர்த்தாக்களாக இருந்தார்கள் என்ற காரணம்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் போன்றவர்களின் கொலைகளைக் கூட முழுமையான விசாரணைக்கு உட்படுத்தாத அரசாங்கம் என்ற வகையிலும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக பல நூறு தமிழர்கள் கொல்லப்படவும், கடத்தப்படவும் காரண கர்த்தாவாக இருக்கின்ற அரசாங்கம், சமாதானத்திற்கான கதவுகளைப் பூட்டி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிபுணர்கள் குழு முன்வைத்த பிரேரணைகளைக்கூட நிராகரித்து யுத்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்ற அரசாங்கம் என்ற வகையிலும், வடக்குக் கிழக்கு இணைப்பைத் துண்டித்து கிழக்கை சிங்கள மயமாக்கும் செயலைக் கண்டித்தும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப்பிரதிநிதிகளை நிராகரித்து இராணுவ அதிகாரிகள் ஊடும், தனது கைத்தடிகள் ஊடும் கிழக்கை கபளீகரம் செய்யும் ஜனாதிபதியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளைக் கண்டித்தும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை மிக மோசமாக பாதிக்கக்கூடிய ஜனாதிபதி சமர்ப்பிக்கும் உரையை தமிழ் மக்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதனை வன்மையாக கண்டிக்கின்றோம் என்பதை இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்காட்டுவதற்காகவும் அப்பாவித் தமிழ் மக்களின் கடத்தல் மற்றும் கொலைகளைத் தடுத்து நிறுத்த தவறி அவை தொடர்ந்து நடந்து கொண்டிருக்க காரண கர்த்தாவாக இருக்கக்கூடிய ஜனாதிபதியின் செயற்பாடுகளை உலகம் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துக்காட்டுவதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது வரவு செலவுத்திட்ட உரை நிகழ்ச்சியை புறக்கணிக்க தீர்மானித்திருக்கிறது என்றுள்ளது. (ச)

# ஓமந்தைப் பாதை தற்காலிகமாக திறப்பு

(கொழும்பு)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வன்னி சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், மதத் தலைவர்களும் மீண்டும் வவுனியா செல்வதற்காக ஓமந்தை சோதனைச் சாவடி நேற்று பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரையான இரண்டு மணித்தியாலத்திற்கு தற்காலிகமாக திறக்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், பத்மநாதன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, எம்.கே. சிவாஜிலிங்கம், சிவநாதன் கிஷோர், எஸ்.அரிய நேந்திரன், கே.சிவநேசன், எஸ்.கனகரத்தினம், சந்திரநேரு சந்திரகாந்தன் மற்றும் மன் னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் உள்ளிட்ட மதத் தலைவர்கள் வன்னியில் இருந்து ஓமந்தை ஊடாக நேற்று பிற்பகல் வவுனியாவிற்கு திரும்பினர்.

இவர்கள் நேற்று முன்தினம் காலையில் வன்னிக்கு சென்றிருந்தனர். அங்கு அவர்கள் சு.ப.தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்வில் பங்கேற்றுக் கொண்டிருந்தபோது ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அருகாமையில் துப்பாக்கிச் சமர் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தையடுத்து தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக கூறி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் ஓமந்தை சூனியப்பிர தேசத்தில் இருந்து வெளியேறினர். (ச-5)


## மூன்றாமாண்டு நினைவஞ்சலி

1924 2004

07 11



09 10

திதி திரயோதசி (07.11.2007)

### தர்மலிங்கம் பரராஜசிங்கம்
(புங்குடுதீவு 1-ம் வட்டாரம்)
(ஸ்தாபகர்: Jaffna Traders Jaffna)

உனை இழந்த காலங்கள் கடந்து செல்கின்றன!
நீ எம் நெஞ்சில் போட்ட கோலங்கள் கலைய மறுக்கின்றன!
தானமாய் நீ தந்த வாழ்வு! தரணியில் நீ தந்த உயர்வு
வாழும் காலங்கள் வரைக்கும் உனக்கான நினைவுகள் நிலைக்கும்!
ஓடாய் தேய்ந்து நீ உழைத்தாய்! ஓடும் காலம் வரை நிலைப்பாய்!
தேடும் எம் சந்ததி உனை என்றும், தேர்ந்து தெளிந்த உன் வாழ்வை!
ஆடும் தில்லை அம்பலன் பாதம், அமரனாய் அமர்ந்தெம்மை காப்பாய்!

27/7, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.021 222 3205

குடும்பத்தினர்.

(சி-516)


## தமிழ்ச்செல்வன் மறைவுக்கு...

களையும் சந்தித்தபோதும் இறை வன் எம்மோடு இருந்து அழிவுகள் ஒவ்வொன்றையும் ஆக்கத்தின் பாதையில் இட்டே சென்றிருக்கிறார். இவரின் இறப்பு தமிழ் மக்களுக்கு அமைதியைக் கொண்டுவர இறைவன் நிச்சயம் துணைபுரிவார்.

1992 ஆம் ஆண்டு யாழ்.மறைமாவட்டத்தை நாம் பொறுப்பேற்ற காலத்தில் இருந்து தமிழ்ச்செல்வனை பல முறை சந்தித்துள்ளோம். சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை தவிர்க்கும் வழிவகைகளையும் சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞைகளையும் முன்னெடுப்பதற்குத் தேவையான விடயங்களையும் பற்றிப் பேசியுள்ளோம்.

இடம் பெயர்ந்த பின்பு கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் போதெல்லாம் தனிமையாகவும் பிறரோடும் தமிழ்ச்செல்வனை சந்தித்து அமைதிப் பேச்சுக்கள் பற்றி உரையாடியுள்ளோம். பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த பிறகும் பல தடவைகள் தனியாகவும் பிறரோடும் இவரைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினோம்.

எமது சந்திப்புக்கள் எப்போதும் நம்பிக்கை தருவதாகவும் உறுதியூட்டுவதாகவும் இருந்திருக்கின்றன. இவர் யாழ்.ஆயர் மட்டிலும் யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் மட்டிலும் எப்போதும் மதிப்பும் பரிவும் கொண்டவராக விளங்கினார்.

சமாதானப் பேச்சுக்களிலும் சமாதான முன்னெடுப்புக்களிலும் முன்னின்று தன்னை ஒரு சமாதான புறாவாகவே இனங்காட்டியுள்ள இவரின் மறைவினால் சமாதானத்திற்கும் பேச்சுக்களுக்குமான தங்களுடைய நிலைப்பாடு நிறுத்தப்பட்டுவிடக்கூடாது என்றே விரும்புகின்றோம்.

தமிழ் கூறும் நல்லுலகும் சர்வதேசமும் அதிர்ச்சியிலும் கலக்கத்திலும் உறைந்து போயிருக்கும் இந்த வேளையில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் வேதனைகளையும் கத்தோலிக்கத்திருச்சபை குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பாக தங்களுக்கு சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

இவரின் நல்ல பணிகளுக்காக இறைவன் முழுமையான சம்பாவனையை தருவார் என்ற உறுதியுடன் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து இறைவன் சன்னிதானத்தில் இவர் இளைப்பாற இறையாசி வேண்டுகின்றோம். (ச)

## 120 மேலதிக...

வாக்களித்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சபையில் பிரசன்னமாகி யிருக்கவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். இராணுவ வீரர்களின் நலன் கருதி இவ்வாக்கெடுப்பில் தமது கட்சி கலந்து கொள்ளாதென அவர் அறிவித்தார். (ச-5)

## வரவு-செலவுத்திட்டத்தை...

தல்களை மேற்கொண்டனர் என்பது கடந்த கால அநுபவங்களாகும். எனினும் சோதனைச் சாவடிகளில் கடமையில் இருக்கின்ற பாதுகாப்பு படையினர் நித்திரை செய்கின்றனர்.

நாடாளுமனற பாதுகாப்பு தொடர்பில் அதிகளவான கவனம் செலுத்த வேண்டும். வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்ற நேரத்தில் புலிகள் தம்வசமுள்ள விமானத்தை கொண்டு நாடாளுமன்றத்தின் மீது தற்கொலை தாக்குதல் நடத்தக் கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றார். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.